*Registered as a News Paper* பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

**THE EELANAATHAM** Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 04 (20 - 08 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 183


## மாணவர் பார்வைக்கென தமிழீழ தேசிய வளங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் தேசிய வளங்கள் மாணவர்களின் பார்வைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் தமிழீழத் தேசிய வளங்களைக்காட்டும் தமிழீழ வரைபடங்களை வைப்பதற்கு தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது. விரைவில் சகல பாடசாலைகளிலும் ஒரே நேரத்தில்இவை (4 ஆம் பக்கம் பார்க்க)



# சமுதாய எழுச்சிக்கு குன்றா மன உறுதியும் தேசியப் பற்றும் அவசியம்

(யாழ்ப்பாணம்)

ஆற்றலும், தேசியப் பற்றும் உள்ளவர்கள் இணைந்துதேசிய விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க முன்வரவேண்டும். எந்த நிலையிலும் குன்றாத மன உறுதியும், திடமான மனப்போக்கும் எமது ஆசிரியர்களிடம் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் சமுதாயம் எழுச்சிபெறும் நிலை உருவாகும் என தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியத் தலைமைச் செயலகத்தை நேற்றுக்காலை திறந்துவைத்து உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் கோ. மகேந்திராஜா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் யாழ் மாவட்டத் தளபதி தினேஷ் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முக்கிய பிரமுகர் பாலகுமார், மூத்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலை, மூளாய் மீது கடும் எறிகணைத் தாக்குதல்

(பொன்னாலை

பொன்னாலை-மூளாய் ஆகிய பகுதிகளை நோக்கி காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் கடும்எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று நண்பகல் சுமார் இரண்டு மணிநேரமாக மேற்படி பகுதிகளை நோக்கி பல தடவைகள் தாக்குதல் நடாத்தப்பட்டன.

இத்தாக்குதலின்போது இப் பகுதிகளில் இருந்த பொது மக்களின் வீடுகள் சில பலத்த சேதமடைந்தன. இப்பகுதி மக்கள் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர். (சு)

## வவுனியா இராணுவ முகாமில் இரு குடும்பஸ்தர் கைது

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் இரு தமிழ்க் குடும்பஸ்தர் இராணுவத்தால் திடீரெனக் கைது செய்யப்பட்டனர்.

18 ஆம் திகதி காலை வவுனியா நகரை நோக்கிச் சென்றவர்களில்கல்மடுவைச்சேர்ந்த சுப்பிரமணியம்பொன்னையா, ராமச்சந்திரன் ஆகிய இருவருமேகைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்விருவரும் குறிப்பிட்ட சோதனை முகாம் பகுதியில் மரம் ஒன்றுடன் இணைத்துக் கட்டப்பட்டிருந்தனர் என்று கூறப்பட்டது.

வவுனியா நகர்ப்பகுதியில் தொடர்ந்து பொது மக்கள் ( ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்கள் இறக்குவதை

## காங்கேசன்துறைக்கு

# இரத்தம் சிந்தா சதிப்புரட்சி மூலம் சோவியத் அதிபர் கொர்பசேவ் பதவி கவிழ்க்கப்பட்டார்

## உப-ஜனாதிபதி புதிய அதிபராக பதவி ஏற்பு

(மொஸ்கோ)

**சோவியத் ஜனாதிபதி மிகையில் கொர்பச்சேவ் நேற்று அதிகாலையில் இடம்பெற்ற இரத்தம சிந்தாச் சதிப்புரட்சி ஒன்றின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்டார். சதிப்புரட்சிக்கு உதவி ஜனாதிபதியும இராணுவத்தலைமைப்பீடமும் உளவுஸ்தாபனமான கே. ஜி பியும் உடந்தையாக இருந்துள்ளன**

கொர்பச்சேவைப் பதவி நீக்கம் செய்து நாட்டின் அவசரகாலக் குழு என்ற பெயரில் சோவியத் கம்யூனிஸ பழைமைவாதிகளின்குழு சோவியத் அரசைக் கைப்பற்றியிருப்பதாக ரஷ்யாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் டாஸ் தெரிவித்துள்ளது.

இதுவரை உதவி ஜனாதிபதியாக இருந்து வந்த



வத்தினர்சடும்எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று நண்பகல் சுமார் இரண்டு மணிநேரமாக மேற்படி பகுதிகளை நோக்கி பல சேதமடைந்தன. இப்பகுதி மக்கள் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர். (சு)

## வவுனியா இராணுவ முகாமில் இரு குடும்பஸ்தர் கைது

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் இரு தமிழ்க் குடும்பஸ்தர் இராணுவத்தால் திடீரெனக் கைது செய்யபட்டனர்.

18 ஆம் திகதி காலை வவுனியா நகரை நோக்கிச் சென்றவர்களில்கல்மடுவைச்சேர்ந்த சுப்பிரமணியம்பொன்னையா, ராமச்சந்திரன் ஆகிய இருவருமேகைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்விருவரும் குறிப்பிட்ட சோதனை முகாம் பகுதியில் மரம் ஒன்றுடன் இணைத்துக் கட்டப்பட்டிருந்தனர் என்று கூறப்பட்டது.

வவுனியா நகர்ப்பகுதியில் தொடர்ந்துபொது மக்கள் பொருள்கள் இறக்குவதை

( ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறைக்கு மாற்றுமாறு பணிப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் அனுப்பப்படும் பொருள்கள் படிப்படியாக பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறைக்கு மாற்றும்படி சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு புனர்வாழ்வு அமைச்சுக்கு பணித்துள்ளது என கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை. காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த 500 தொன் உணவுப் பொருள்களை ஏற்றுக் கொள்ளும்படியாழ். அரசாங்க அதிபர் பணிக்கப்பட்டுள்ளார் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெரிவுக்குழு விபரம் இந்தவாரம் வெளிவரும்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உதவியாக நியமிக்கப்பட விருக்கும் தெரிவுக் குழுவில் இடம்பெறுவோரின் விபரம் இந்த வாரம் அறிவிக்கப்படும்.

பாராளுமன்றம் இன்று முதல் 23ஆம் திகதி வரை நடைபெறும் வேளையிலேயே இந்த முடிவுஎடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## பெங்களூரில் நேற்றும் ஒருவர் மரணம்

(பெங்களூர்)

கர்நாடகமாநிலத்தின்தலைநகரமான பெங்களூருக்கு அருகிலுள்ள கோலான் குண்டே என்னும் கிராமத்தில் ஒரு வீட்டை பொலிசார் சுற்றி வளைத்தபோது ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் இந்த வீட்டில் இருந்த எட்டுப் பேரும் விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தேடப்படும் சிவராசனும் அவர்களில் ஒருவராக இருக்கக் கூடுமென்றும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

அதேவேளை கோலான் குண்டே கிராமத்தில் பொலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பதவி கவிழ்க்கப்பட்டார்

## உப-ஜனாதிபதி புதிய அதிபராக பதவி ஏற்பு

(மொஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி மிகையில் கொர்பச்சேவ் நேற்று அதிகாலையில் இடம்பெற்ற இரத்தம் சிந்தாச் சதிப்புரட்சி ஒன்றின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்டார். சதிப்புரட்சிக்கு உதவி ஜனாதிபதியும இராணுவத்தலைமைப்பீடமும் உளவுஸ்தாபனமான கே. ஜி பியும் உடந்தையாக இருந்துள்ளன

கொர்பச்சேவைப் பதவி நீக்கம் செய்து நாட்டின் அவசரகாலக் குழு என்ற பெயரில் சோவியத் கம்யூனிஸ பழைமைவாதிகளின்குழு சோவியத் அரசைக் கைப்பற்றியிருப்பதாக ரஷ்யாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் டாஸ் தெரிவித்துள்ளது.

இதுவரை உதவி ஜனாதிபதியாக இருந்து வந்த கெனெடி ஜெனயே சோவியத் அரசைக் கை பற்றியிருக்கும் குழுவின் தலைவராகவும், சோவியத்தின் புதிய ஜனாதிபதியாகவும் பொறுபபேற்றிருக்கிறார் இவருக்கு இராணுவமும் அந்நாட்டின் மிகவும் சக்தி வாய்ந்த உளவுஸ்தாபனமான கே. ஜி பியும் தமது ஆதரவைவழங்கியுள்ளன

(4 ஆம் பக்கம் பார்க்க)



## வலதுசாரிகளின் சதி

## பொரிஸ் யெல்சின் கண்டனம்

(மாஸ்கோ)

சோவியத் யூனியனின் அதிபர் மிகையில் கொர்ப்பசேவ் பதவியிலிருந்து நீக்கப்பட்டமையானது வலதுசாரிகளின் சதி என்று ரஷ்யத் தலைவர் பொரிஸ் யெல்சின் கண்டனம் செய்துள்ளார்.

மேலும் கொர்பச்சேவுடன் தொடர்பு கொள்ள தாம் எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை என்றும், அதிரடிப் புரட்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாமென அதிகாரிகளையும், மக்களையும் கேட்டுக்கொள்ளப் போவதாகவும் குறிப்பிட்டுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மொஸ்கோவில் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

(மாஸ்கோ)

கொர்பச்சேவ் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கும் சிறைபிடிக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுப் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாஸ்கோவில் பாராளுமன்றம் முன்பாக ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம்நடத்தியுள்ளார்கள்.

சோவியத் ஜனாதிபதியாகப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டம், கலகங்களுக்கு சோவியத்தில் தடை

(மாஸ்கோ)

கொர்பச்சேவ் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்பு ஒரு தொகுதி கவச வாகனங்கள் மாஸ்கோ நோக்கிச் சென்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர் கிரெம்ளின் மாளிகையின் முன்பாக இருபது இராணுவ கவச வாகனங்கள் நின்றதாகவும், செஞ்சதுக்கம் அமைதியாகக் காணப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. வழமைக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொர்ப்பசேவுடன் தொடர்பு ஏற்படுத்த முடியவில்லை

(மாஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் காவலில் வைக்கப் பட்டுள்ளதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. கொர்பச்சேவ் அவரது அரசாங்க இல்லத்தில் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக ரஷ்ய பெடரேசன் அதிபர் பொறிஸ் யெல்சினின் பிரதிநிதி ஒருவரை ஆதாரங்காட்டி ஏ எவ் பி ஏஜென்சி செய்தியை வெளியிட்டுள்ளது ஆனால் இன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோர்ஜ் புஷ் கண்டனம்: உதவிகள் நிறுத்தம்

(வாஷிங்டன்)

சோவியத் ரஷ்யாவில் இப்போது ஏற்பட்டுள்ள மாற்றம் கவலைக்குரியது. அது அமெரிக்கா உட்பட சோவியத் வெளிநாட்டு உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா சோவியத் ரஷ்யாவுக்கான அனைத்துப் பொருளாதார உதவிகளையும் உடன் நிறுத்திவைத்துள்ளது.

இதேவேளை, கொர்பசேவின் உயிருக்கான உத்தரவாதத்தை சோவியத்தின் புதிய அரசாங்கம் அளிக்கும்வரை உதவிகளைநிறுத்திவைத்துள்ளதாக ஜேர்மன் நாட்டு ஜனாதிபதி ஹெல்மட் கோஸ் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதுக்குமான

DHL WORLDWIDE EXPRESS

துரித

## தபால் சேவை

உங்கள்கடிதங்களை ஒப்படையுங்கள்

DHL INTERNATIONAL

C/o. COSMOS MARKETING SERVICES,

120, K. K. S. Road, JAFFNA.

(B/2953)


# பங்கீட்டு அடிப்படையில் அத்தியாவசிய பொருள்கள்

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள் கள் நியாயவிலையில் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட வுள்ளன.

கப்பல் மூலம் யாழ்ப்பாணத் திற்கு கொண்டு வரப்படும் அரிசி, மா, சீனி ஆகியவற்றை பல நோக்குக் கூட்டுறவுச் சங் கங்கள் ஊடாக நியாயவிலை யில் வழங்குவதற்கு யாழ். அரசாங்க அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார். அடுத்த வாரம் முதல் இவ்விநியோகம் ஆரம்பமாகும் என அவர் தெரிவித்தார். (ச)


## கவனிக்கவும்

மில்க்வைற் சலவைத்தூள் நீல வண்ணத்தில் அச் சடிக்கப்பட்ட புதிய பக்கற்றில் விற்பனையாகிறது.(வழ மையான பொலித்தீன் பக்கற் கிடையாததால்) 50 கிறாம் அடைக்கப்பட்டது.

100 வெற்றுப் பக்கற் சேர்ப்பித்து அழகியதோர் உள்ளூர் உற்பத்தி லேஞ்சி அன்பளிப்பாகப் பெறுங்கள்.

மில்க்வைற்.
யாழ்ப்பாணம்.

(B-2971)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்
23 01 1972

வீர மரணம்
01-09 1990

2-ம் லெப். கனோஜி

கண்ணே நீ எனக் காத்திருந்தோம்
மண்ணே உயிரென நீயும் சென்றாய்
விண்ணே அதிர்ந்திடப் போர் தொடுத்தாய்
கனோஜி எனும் பெயரும் கொண்டாய்.
வன்னியில் போர்க்கொடி தூக்கி நின்றாய்
வசந்தங்கள் யாவையும் மறந்து நின்றாய்
அன்னியப் படைதனை அகற்றுதற்காய்
இன் உயிர் தனையும் நீ ஈந்து விட்டாய்
புத்தொளி பெற்றதோர் புலியானாய்
புனிதப்போர் நிகழ்த்திடும் அணியானாய்
நற்றமிழ் மண்ணிற்கு விதையானாய்
நம்மின வாழ்விற்கும் வழி சமைத்தாய்.
களத்தினில் வீழ்வதும் வீரமடா- உன்
உளத்தினில் உதித்ததும் தீரமடா- நீ
நிலத்தினில் சிந்திய உதிரமடா
நிச்சயம் ஈழமாய் உதிக்குமடா.

(இவருடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட ஏனைய 36 போராளிகளுக்கும்)

-குடும்பத்தினர்

(B/2938)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1990 1ஆம், 2ஆம், 3ஆம் 4ஆம் கல்வியாண்டு பரீட்சைகள்

கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதி களில் நடைபெறவுள் ளன. மாணவர்கள் கவனத்திற் கொள்ள வும்.

பரீட்சை

1ஆம் ஆண்டு
கலை / வர்த்தகம் / முகா மைத்துவம்
தொடங்கும் திகதி
19-09-91
முடிவடையும் திகதி
28-09-91

2ஆம் ஆண்டு பொது / சிறப்பு - பகுதி I
கலை / வர்த்தகம் / முகா மைத்துவம் / முதுகலை மாணித் தகுதி காண்தேர்வு
தொடங்கும் திகதி
30-09-91
முடிவடையும் திகதி
11-10-91

3ஆம் ஆண்டு பொது/ சிறப்பு - பகுதி II
கலை / வர்த்தகம் / முகா மைத்துவம்/
முதுகலைமாணித் தகுதி காண்தேர்வு
தொடங்கும் திகதி


## ஓராண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை ஆனந்தன்
(முத்துக்கிருஷ்ணன் குணாளன்)
புலியங்கூடல்
ஊர்காவற்றுறை
வீரஜனனம் 08 05-1973
வீரமரணம் 31 08-1990
திதி 20-08-1991

அன்பான மகனே
குணாளா...
நீ... தமிழினத்திற்கோர்
மணாளா...
அடிமை விலங் கொடிக்க
எதிரிக்கு தலை
கொடுத்தாய்
உன் சாவு
தலைமறைவாகவில்லை
தலை முறைக்கு
சரித்திரம் படைக்கிறது
நீ ஏந்திய பாசத்
துப்பாக்கி ..
உன் நேசக்கரங்களை
விட்டு நகரவில்லை
ஓராண்டு அல்ல
குணாளா...
ஓராயிரம்
ஆண்டாயினும் உன்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



உதயம்
08
11
1972

வீரமரணம்
20
07
1991

### வீரவேங்கை கொலின்
(சண்முகானந்தம் காந்தி)

தமிழனின் தன்மானம் காக்க - எம்
தாய் மண்ணை மீட்க
உறுதியுடன் உன் கரங்கள்
ஆயுதம் ஏந்திய போது
உன் பாதை வழியில்
எம் பாதம் பதிக்க
சோதரிகளில் இருவர்
துணிவோடு வந்தோம்
உளந்தனில் விடுதலைத் தீ ஏந்தி
களந்தனில் வீரமுடன் போரிட்டாய்
நிலத்தனில் செங்குருதி சிந்தி
நீள் துயிலில் ஆழ்ந்தும் விட்டாய்,
உன் வீர மரணச் செய்தி எம்
செவிகளில் வீழ்ந்த போது
உளம் நொந்து தான்
நாம் அழுதோம்
பாசம் தந்த சோகம் அது
ஆனால்,
மண்ணுக்காக எம் மக்களுக்காக
மாவீரனாய் நீ மரணித்ததை எண்ணி
மனதுக்குள் பெருமை கொண்டோம்
விடுதலை உணர்வு தந்த
உளம் தளராத உறுதி இது

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 08 - 20

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் பூநகரி, பரமன்கிராய்ப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தந்தை, மகன்

1988ஆம் ஆண்டு பளை, இத்தாவில் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய பளை பிரதேசப் பொறுப்பாளர்
சமுத்திரன் (சண்முகம் சந்திரமோகன் - திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
கப்டன் கரீம்

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பு, தாந்தாமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
கமால் (சின்னையா சபாரத்தினம் - கோயில்போரதீவு)

மட்டக்களப்பு, வெல்லாவெளிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன. மாணவர்கள் கவனத்திற் கொள்ளவும்.

பரீட்சை

1ஆம் ஆண்டு
கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்
தொடங்கும் திகதி
19-09-91
முடிவடையும் திகதி
28-09-91

2ஆம் ஆண்டு பொது / சிறப்பு - பகுதி I
கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / முதுகலைமாணித் தகுதி காண்தேர்வு
தொடங்கும் திகதி
30-09-91
முடிவடையும் திகதி
11-10-91

3ஆம் ஆண்டு பொது/ சிறப்பு - பகுதி II
கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்/
முதுகலைமாணித் தகுதி காண்தேர்வு
தொடங்கும் திகதி
12-10-91
முடிவடையும் திகதி
25-10-91

4ஆம் ஆண்டு சிறப்பு - பகுதி III
கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / முதுகலைமாணித் தகுதிகாண்தேர்வு
தொடங்கும் திகதி
26-10-91
முடிவடையும் திகதி
31-10-91

இராமநாதன் நுண்கலைப் பிரிவு

1ஆம் ஆண்டு
தொடங்கும் திகதி
30-09-91
முடிவடையும் திகதி
02-10-91


2ஆம் ஆண்டு
தொடங்கும் திகதி
03-10-91
முடிவடையும் திகதி
05-10-91

3ஆம் ஆண்டு
தொடங்கும் திகதி
07-10-91
முடிவடையும் திகதி
09-10-91

4ஆம் ஆண்டு
தொடங்கும் திகதி
04-11.91
முடிவடையும் திகதி
08-11-91

பதிவாளர்

(B-2970)



வீரவேங்கை
ஆனந்தன்
(முத்துக்கிருஷ்ணன் குணாளன்)
புளியங்கூடல்
ஊர்காவற்றுறை
வீரஜனனம் 08 05-1973
வீரமரணம் 31 08-1990
திதி 20-08-1991

அன்பான மகனே
குணாளா...
நீ... தமிழினத்திற்கோர்
மணாளா...
அடிமை விலங் கொடிக்க
எதிரிக்கு தலை
கொடுத்தாய்
உன் சாவு
தலைமறைவாகவில்லை
தலை முறைக்கு
சரித்திரம் படைக்கிறது
நீ ஏந்திய பாசத்
துப்பாக்கி ..
உன் நேசக்கரங்களை
விட்டு நகரவில்லை
ஓராண்டு அல்ல
குணாளா...
ஓராயிரம்
ஆண்டாயினும் உன்
சரித்திரம் எம்
மண்ணிலும் மனதிலும்
நகராதிட்டாது,

தாய், தந்தை,
92, பழம்வீதி, பெரியப்பா,
சுந்தர்மடம். சகோதரர்கள்
(R/1652)



## வீரவேங்கை கொலின்
(சண்முகானந்தம் காந்தி)

தமிழனின் தன்மானம் காக்க - எம்
தாய் மண்ணை மீட்க
உறுதியுடன் உன் கரங்கள்
ஆயுதம் ஏந்திய போது
உன் பாதை வழியில்
எம் பாதம் பதிக்க
சோதரிகளில் இருவர்
துணிவோடு வந்தோம்
உளந்தனில் விடுதலைத் தீ ஏந்தி
களந்தனில் வீரமுடன் போரிட்டாய்
நிலத்தனில் செங்குருதி சிந்தி
நீள் துயிலில் ஆழ்ந்தும் விட்டாய்,
உன் வீர மரணச் செய்தி எம்
செவிகளில் வீழ்ந்த போது
உளம் நொந்து தான்
நாம் அழுதோம்
பாசம் தந்த சோகம் அது
ஆனால்,
மண்ணுக்காக எம் மக்களுக்காக
மாவீரனாய் நீ மரணித்ததை எண்ணி
மனதுக்குள் பெருமை கொண்டோம்
விடுதலை உணர்வு தந்த
உளம் தளராத உறுதி இது
எம் உறுதி குன்றாது
நீ சென்ற பாதை வழி
நடக்கின்ற எம் வீரம்
என்றுமே குலையாது
வெல்வோம்
எம்தேசம் மீட்போம்

(B/2969)

சகோதரன், சோதரிகள்.

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்
## கல்வியாண்டு 1991/92

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

- ✶ கலைமாணி B. A
- ★ விஞ்ஞானமாணி B. sc. (புள்ளிவிபரவியல்)
- ★ வணிகமாணி B. Com.

க. பொ. த (உயர்தரம்) 3பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி 01 - 09 - 1991

விபரங்களுக்கு
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/2967)

## நினைவு கூருகின்றோம்...

## 1991 - 08 - 20

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் பூநகரி, பரமன்கிராய்ப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தந்தை, மகன்

1988ஆம் ஆண்டு பளை, இத்தாவில் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய பளை பிரதேசப் பொறுப்பாளர்
சமுத்திரன் (சண்முகம் சந்திரமோகன் - திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
கப்டன் கரீம்

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பு, தாந்தாமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
கமால் (சின்னையா சபாரத்தினம் - கோயில்போரதீவு)

மட்டக்களப்பு, வெல்லாவெளிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
மைக்கல்றாஜ் (சின்னத்தம்பிவினாயகமூர்த்தி-கோயில் போரதீவு)

மட்டக்களப்பு, 40ஆம் கொலனிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
முகிலன் (பத்தன் - திருப்பழுகாமம்)

பலாலி முகாமிலிருந்து வசாவிளான் பகுதியை நோக்கி சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய
பகவான் (சின்னத்தம்பி சதீஸ்வரன் - கோண்டாவில்)
நவம் (மகாலிங்கம் மோகன் - ஊரெழு கிழக்கு, சுன்னாகம்)

ஏறாவூரில் சிறிலங்காப் படையினரால் உயிருடன் தீமூட்டிக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்

கிளிநொச்சியில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வசாவிளான், அச்சுவேலிப் பகுதிகளைச் சேர்ந்த இருவர் உட்பட 4 தமிழர்கள்

ஆனையிறவு கொம்பன் வெளியில் சிறிலங்காப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

அராலியில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

வேலணை கிழக்கில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட அதே இடத்தைச்சேர்ந்த யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய ஆசிரியர்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2945)

சிந்தனைக்கு

நிகழ்காலம், கடந்தகாலம், இரண்டும்
எதிர்காலத்தில் அடங்கியிருக்கக் கூடும்

— டி. எஸ். ஈலியட்

ஈழநாதம்

31, மகேந்திரவீதி, யாழ்ப்பாணம், 20-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

# தமிழீழ எல்லைகளைமீட்கும் வரை தமிழீழத் தேசியப்படை போராடும்

- கலையரசன்

தமிழின விடிவிற்காக தம் உயிரையே கொடுக்கத் தயாராகவும், அவர்களுக்காகவே தமது வாழ்க்கையைத் தியாகம் செய்யவும் துணிந்துள்ள தமிழீழத் தேசியப்படை தமிழீழத்தின் எல்லைகளை மீட்கும் வரை போராடும். தமிழீழ மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்கும்வரை போர் தொடர்ந்து கொண்டே போகும். இப்போரைத் தாம் தொடர்ந்து மேற்கொள்வதற்கு எமது தமிழீழத் தேசியப்படைக்கு அனைத்து மக்களும் தமது கரங்களைக் கொடுத்து பலப்படுத்த வேண்டும்.

புங்குடுதீவில் அண்மையில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில்கலந்துகொண்டு உரையாற்றிய மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு தலைமைச் செயலக உறுப்பினர் திரு. கலையரசன் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்:

தமிழரின் வரலாற்றில் இக்காலமே பொற்காலமாகும் தமிழரின் வரலாற்றை நாம் நான்கு வகைகளாகப் பார்க்கலாம். எமது இறைமையைப் பாதுகாத்து, எம்மை நாமே ஆண்ட எமது தமிழ் அரசர் காலம் முதலாவதாகும். இக்காலத்தையும் நாம் பொற்காலம் என்று கூற முடியாது. சமூக ஏற்றத் தாழ்வுகள், சாதி வேறுபாடுகள், பெண்ணடிமைத் தனம் மேலோங்கி இருந்தது. இரண்டாவதாக நிலச்சுவாந்தர்கள் எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். இதிலும் மக்கள் இவர்களின் அடிமைகளாகவே பயன்படுத்தப்பட்டனர். அதற்கடுத்தபடியாக 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது சமுதாயத்திலிருந்து நடுத்தர வர்க்கப் படித்தவர்கள் எம்மைப் பிரதிநிதித்துவப் படுத்தினர். இதில் எமது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் தமது சுயநலத்திற்காக மக்களின் வாக்குகளைப் பயன்படுத்தினர். இப்படியாகக் கடந்த மூன்று காலங்களும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறக்கூடிய எந்த நடவடிக்கையிலும் பிரதிநிதித்துவப் படுத்தியவர்கள் எடுக்க முயலவில்லை.

அதற்கடுத்த நான்காவது காலமே 1972ம் ஆண்டுக்குப் பிற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்காலம். இக்காலத்தில்தான் தமிழீழ மக்களின் தேசிய விடுதலையை வென்றெடுக்கும் மிகப் பெரிய போராட்டம் முன்னெடுக்கப் படுகிறது. தமிழீழ மக்களுக்காக தமது உயிரையே தியாகம் செய்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் தனியே நாட்டைப் பெறுவது மட்டுமல்லாமல், எமது சமூகத்தில் புரையோடியுள்ள சமூக ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து ஒரு புத்துணர்ச்சி பெற்ற சோசலிச தமிழீழத்தைப் பெற்றெடுக்கப் போராடி வருகின்றார்கள் இவர்களின் காலமே தமிழரின் வரலாற்றில் பொற்காலம். இந்தப் பொற்காலத்தில் தான் எமது உரிமைகளைப் பெறுவதற்கான இந்தத் தர்மயுத்தத்திற்கு அனைத்து மக்களும் எந்தவித வேறுபாடுமின்றி முன் வந்தால் தமிழீழத்தில் ஆனையிறவு முகாம் மட்டுமல்ல, எந்த முகாமும் இருக்க முடியாது. அதுவரை தொடரும் விடுதலைப் போரில் தமிழினம் எமது தலைவனின் வழிகாட்டலில் போராட வர வேண்டும் என்று கூறினார்.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா, மக்கள் முன்னணி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு தலைமைச் செயலக உறுப்பினர் புலியரசன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## இல. தமிழரைப் பலியிடும் இந்தி. அரசியல்வாதிகள்

வைத்திய சிகிச்சைக்காகச் சென்றிருந்த பன்னிரெண்டு விடுதலைப்புலிகள் கர்நாடக மாநிலத்தில் சயனைட் உட்கொண்டு மரணமடைந்துள்ளனர். மேலும் ஐவர் ஆபத்தான நிலையில் பெங்களூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் விடுதலைப்புலிகள் சயனைட் உட்கொண்டு மரணமடைந்தது இது முதல் தடவையல்ல. தமிழ் நாட்டிலேயே அது முதல் ஆரம்பித்தது. அதாவது தமிழ் நாட்டு அரசாங்கமே இந்த நெருக்கடியை முதலில் தோற்றுவித்தது.

விடுதலைப் புலிகள் மீது மட்டுமல்ல, இலங்கைத் தமிழர் மீதும் தமிழ் நாட்டிலேயே கெடுபிடிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு ஆட்சியில் உள்ளவர்களே பொறுப்பாகவும் ...ள்ளனர் இலங்கையில் இனப்பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து எப்பொழுதும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளும் சரி இந்திய அரசியல்வாதிகளும சரி இலங்கைத் தமிழர் விவகாரத்தைத் தமக்கு அரசியல் ஆதாயம் தேடும் ஒரு விவகாரமாகப் பார்த்தார்களே ஒழிய இலங்கைத் தமிழரின் இன்னல்களை அனுதாபத்துடன் நோக்கவில்லை.

இலங்கைத் தமிழர் மீது இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள் ராஜீவ் காந்தியின் கொலையினால் ஏற்பட்டதல்ல. அதற்கு முன்னரே இந்தக் கெடுபிடி ஆரம்பிக்கத் தொடங்கி விட்டது தி மு க. அரசாங்கத்தை வெளியேற்றுவதற்காக இலங்கைத் தமிழர் விவகாரத்தை அ.தி.மு.கவும் காங்கிரஸ்கட்சியும் பெரிதுபடுத்தின. அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் தி.மு.க.வும் இலங்கைத் தமிழருக்கு எதிராக நடவடிக்கையை எடுத்தது. இவையாவும் ராஜீவ் கொலைக்கு முதலே நடந்தன.

இந்த நிலையில், ராஜீவின் கொலை இலங்கைத் தமிழர் மீதான நடவடிக்கைக்கு ஒரு சாட்டாக அரசியல் கட்சிகளுக்கு அமைந்ததே ஒழிய அதுதான் காரணம் என்றில்லை. ஏனெனில் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாய் இன்னும் விசாரணை முடியவில்லை. விடுதலைப்புலிகள்தான் இந்தக் கொலைக்குக் காரணம் என இன்னும் உறுதியான ஆதாரங்கள் கிடைக்கவுமில்லை

இந்திய மத்திய புலனாய்வுத்துறையும், வெகுசனத் தொடர்புசாதனங்களும் அரசியல்வாதிகளின் எண்ணத்திற்கேற்ப இந்தக் கொலைகளை புலிகள்தான் செய்தார்கள் எனச் சாதித்து வருகின்றன. அதற்காகப் பல புனைகதைகளையும் வெளியிட்டு வருகின்றன. ஆனால் முன்னாள் டி ஜி பி களான லட்சுமிநாராயணனும் மோகனதாசும் குறிப்பிடுவது போன்று புலிகள் என்ற கடிவாளத்துடனேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் உண்மையாக கொலையுடன் தொடர்புடையவரைக் கண்டு பிடிக்க முடியாது.

ஆனால் சி.பி.ஐயும், தமிழக அரசும் மேற்கொள்ளும் தொடர்ச்சியான நெருக்குதல்கள் முன்னைய மாநில

## காஷ்மீர் பிரச்சினை தீராவிட்டால் மீண்டும் ஓர் இந்திய - பாகிஸ்தான் போர்மூளும் - நவாப் ஷெரீப்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் இந்தியாவிற்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே இன்னுமோர் போர் ஏற்படும் என பாகிஸ்தானிய பிரதம மந்திரி நவாப் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சஞ்சிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் நவாப் ஷெரீப் காஷ்மீர் பிரச்சினை இரு நாடுகளுக்கும் இடையே பதற்றத்தை அதிகரித்து வருவதாக தெரிவித்தார். இதனால் இப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றும் இல்லையெனில் இது மற்றுமொரு இந்திய- பாகிஸ்தானிய போருக்கு வழிவகுத்துவிடும் எனவும் தெரிவிததார்.

இஸ்லாமாபாத் அணுகுண்டை தயாரிக்கவில்லை என்று தெரிவித்த நவாப் ஷெரீப் இந்தியா மற்றும் அமெரிக்க நாடுகள் இது குறித்து வெளியிடும் கருத்துக்களை முற்றாக மறுத்தார்.

இது தொடர்பாக அமெரிக்கா தமது நாட்டிற்கு தர வேண்டியநிதியுதவியை குறைத்திருப்பதன் மூலமாக பாகிஸ்தானை நியாயமற்ற விதத்தில் தனிமைப்படுத்திவைத்திருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## ஜெயலலிதா அறிக்கைக்கு தி. மு. க. கண்டனம்

(சென்னை)

மத்திய அமைச்சர் ப சிதம்பரத்திற்கு எதிராக அ தி மு. க நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை என முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விடுத்த அறிக்கையை மறுத்து தி. மு. க கண்டனம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய தி. மு. கவின் செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா ப. சிதம்பரத்திற்கு எதிராக கறுப்புக்கொடி காட்டப்படும் என்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட அ.தி.மு.க பிரமுகர் ஒருவர் முன் கூட்டியே அறிக்கை வெளியிட்டதையும் குறிப்பிட்டு ஆகவே அ. தி. மு க தான் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டது எனத் தெரிவித்தார்.

ஆனால் செல்வி ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையிலோ தி. மு. க உள்விட்ட எதிர்க்கட்சியினர் தான் வன்முறையை ஏவி விட்டனர் என்று குறிப்பிட்டது ஆதாரமற்றது என்று ஆலடி அருணா குறிப்பிட்டார்.

இதே நேரம் பாட்டாளி மக்கள் கட்சியும் ஜெயலலிதாவின் அறிக்கையை கண்டித்துள்ளது.

## கடவுச்சீட்டு முகவர்கள் திருவனந்தபுரத்தில் கைது

(திருவனந்தபுரம்)

போலியான இந்திய கடவுச்சீட்டு மற்றும் பயண ஆவணங்களின் பேரில் இலங்கைத் தமிழர்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவந்த முகவர்களை திருவனந்தபுரம் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இந்த மூவரும் இந்த நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்திருந்தனர் என்றும், ஜீவன்குமார், தண்டபாணி, ஹரிதாஸ் ஆகிய மூவர் கைது செய்யப்பட்டனர் என்றும் திருவனந்தபுரம் காவல்துறையினர் தெரிவித்தனர்.

சென்ற வாரம் திருவனந்தபுரத்தில் மூன்று ஹோட்டல்களில் இருந்து கைதுசெய்யப்பட்ட இரண்டு பெண்கள் உட்பட 22இலங்கைத் தமிழர்களை பொலிசார் புலனாய்வு செய்தபோது போலிக் கடவுச்சீட்டுகளுடன் இவர்கள் வெளிநாடு செல்ல திட்டமிட்டிருந்தது தெரியவந்தது என்றும் திருவனந்தபுரம் காவல்துறையினர் தெரிவித்தனர்.

விட்டது. தி. மு. க. அரசாங்கத்தை வெளியேற்றுவதற்காக இலங்கைத் தமிழர் விவகாரத்தை அ. தி. மு. கவும் காங்கிரஸ்கட்சியும் பெரிதுபடுத்தின. அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் தி. மு. க. வும் இலங்கைத் தமிழருக்கு எதிராக நடவடிக்கையை எடுத்தது. இவையாவும் ராஜீவ் கொலைக்கு முதலே நடந்தன.

இந்த நிலையில், ராஜீவின் கொலை இலங்கைத் தமிழர் மீதான நடவடிக்கைக்கு ஒரு சாட்டாக அரசியல் கட்சிகளுக்கு அமைந்ததே ஒழிய அதுதான் காரணம் என்றில்லை. ஏனெனில் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாய் இன்னும் விசாரணை முடியவில்லை. விடுதலைப்புலிகள்தான் இந்தக் கொலைக்குக் காரணம் என இன்னும் உறுதியான ஆதாரங்கள் கிடைக்கவுமில்லை

இந்திய மத்திய புலனாய்வுத்துறையும், வெகுசனத் தொடர்புசாதனங்களும் அரசியல்வாதிகளின் எண்ணத்திற்கேற்ப இந்தக் கொலைகளை புலிகள்தான் செய்தார்கள் எனச் சாதித்து வருகின்றன. அதற்காகப் பல புனைகதைகளையும் வெளியிட்டு வருகின்றன. ஆனால் முன்னாள் டி ஜி பி களான லட்சுமிநாராயணனும் மோகனதாசும் குறிப்பிடுவது போன்று புலிகள் என்ற கடிவாளத்துடனேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் உண்மையாக கொலையுடன் தொடர்புடையவரைக் கண்டு பிடிக்க முடியாது.

ஆனால் சி. பி ஐயும், தமிழக அரசும் மேற்கொள்ளும் தொடர்ச்சியான நெருக்குதல்கள் முன்னைய மாநில மத்திய அரசாங்கங்களின் மறைமுக அனுமதிகளுடன் வைத்தியத்திற்குச் சென்றுள்ள புலிகளைக் கூட மரணமடைய வைக்கின்றது சிலர் ஏன் புலிகள் தற்கொலை செய்து கொள்கின்றார்கள் என்ற கேள்வி கூட எழுப்பலாம்.

இலங்கைத் தமிழரை நாட்டை விட்டு வெளியேற்ற தமிழக அரசாங்கம் துடித்துக் கொண்டிருக்கின்றது. மத்திய அரசும் அதில் அக்கறையாக உள்ளது. அத்தோடு புலிகளுடன் தொடர்புடையவர்களை சிறிலங்கா அரசாங்கத்திடம் ஒப்படைக்க தீர்மானமும் எடுத்துள்ளன. மேலும் ராஜீவ் கொலை வழக்கில் புலிகளை மாட்டி வழக்கை மூடிவிடவும் முயல்கின்றது.

இந்திரா காந்தி கொலை வழக்கிலும் அவ்வாறே இந்திய புலனாய்வுத்துறை செயற்பட்டது கொலையுடன் சம்பந்தப்படாத இருவரை நீதிமன்றத்தில் நிறுத்தி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் தூக்கிலிட்டு வழக்கை மூடிவிட்டது. தூக்கிலிடப்பட்டவர்களின் குடும்பங்கள் தற்பொழுதும் இந்தக் கொலைக்கும் தூக்கிலிடப்பட்டவர்களுக்கும் தொடர்பில்லை என வாதிடுகின்றன. மேலும் 1987இல் சென்னையில் குண்டு வீசிவிட்டு ஓடும் போது துரத்திப் பிடிக்கப்பட்டவர்கள் என இரு காஸ்களும் ஊனமுற்ற புலிகள் மீது வழக்குத் தாக்கல் செய்தவர்கள் இந்திய அதிகாரிகள்.

இந்த நிலையில் இந்தியாவை நம்பி எவ்வாறு சரண் அடைவது. ராஜீவ் கொலை வழக்கில் சரணடைந்த சண்முகத்தையே கொலை செய்தவர்கள் இந்திய காவல் துறையினர்.

இலங்கைத் தமிழர் மீது தொடர்ந்தும் கெடுபிடிகள் நீடிப்பதனால் தமிழக ஆட்சியாளர்களோ, அரசியல்வாதிகளோ நன்மை அடைந்து விட முடியாது. இவையே தமிழக இளைஞர்களின் விழிப்புணர்ச்சிக்கு வழி கோலும் சம்பவங்களாக மாறக் கூடும். அது சிலவேளை அண்மையில் நடைபெறாமல் இருக்கலாம், ஆனால் சில காலத்தின் பின் இன்றைய ஆட்சியாளர்கள் அதற்குப் பதில் சொல்லியாக வேண்டியே வரும்.

---

இருந்தது. இ...

# ஜெயலலிதா அறிக்கைக்கு தி. மு. க. கண்டனம்

(சென்னை)

மத்திய அமைச்சர் ப. சிதம்பரத்திற்கு எதிராக அ. தி. மு. க நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை என முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விடுத்த அறிக்கையை மறுத்து தி. மு. க கண்டனம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய தி. மு. கவின் செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா ப. சிதம்பரத்திற்கு எதிராக கறுப்புக்கொடி காட்டப்படும் என்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட அ. தி. மு. க பிரமுகர் ஒருவர் முன் கூட்டியே அறிக்கை வெளியிட்டதையும் குறிப்பிட்டு ஆகவே அ. தி. மு. க தான் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டது எனத் தெரிவித்தார்.

ஆனால் செல்வி ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையிலோ தி. மு. க உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் தான் வன்முறையை ஏவி விட்டனர் என்று குறிப்பிட்டது ஆதாரமற்றது என்று ஆலடி அருணா குறிப்பிட்டார்.

இதே நேரம் பாட்டாளி மக்கள் கட்சியும் ஜெயலலிதாவின் அறிக்கையை கண்டித்துள்ளது.

# சித்திக்கை விடுதலை செய்ய சுப்ரீம் கோர்ட் உத்தரவு

(டாக்கா)

பங்களாதேசின், விடுதலைப் போரில் முக்கிய பங்கு வகித்த அப்துல் காதில் சித்திக்கை உடனடியாக விடுதலை செய்யுமாறு பங்களா தேஷின்சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

இவர் கடந்த ஜனவரிமாதம் இந்தியாவிலிருந்து பங்களாதேஷிற்கு திரும்பிய சில நாட்களில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தார், முன்னாள் பங்களாதேஷ் ஜனாதிபதி முஜிபுர் ரகுமான் கொலை செய்யப்பட்டதை அடுத்து இந்தியாவில் இருந்த சித்திக் பதினைந்து வருடங்களின் பின்னர் இந்த வருடம் ஜனவரியில் பங்களாதேஷ் வந்திருந்தார்.

நாடு திரும்பிய ஒரு சில நாட்களில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். இவரது மனைவி சுப்ரீம் கோர்ட்டுக்கு விடுத்த மனுவின் பிரகாரம் இவரை விடுதலை செய்யுமாறு அம்மன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் இவரை காவலில் வைத்தது சட்டவிரோதமான செயல் என்றும் சுப்ரீம்கோர்ட் கூறியுள்ளது.

## மகோற்சவம்

(அளவெட்டி)

அளவெட்டி தெற்கு (நாகேஸ்வரம்) ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 23 ஆம் திகதி முற்பகல் 12-10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

செப்டம்பர் 1 ஆம் திகதி ஞாயிறு காலை 8.00மணிக்கு ரதோற்சவமும், 2 ஆம் திகதி திங்கள் காலை 10.00மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

தினமும் மாலை 3 மணிக்கு திருமதி பாலநாதன் சிவபாக்கியம் "தொண்டர் தம் பெருமை" பற்றிப் பேசுவார்.

26 ஆம் திகதி மாலை 4.00மணிக்கு கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் "பணிந்தேத்து மாறறியேன்", என்பது பற்றிப் பேசுவார்.

---

என்றும் இலங்கையிலே இது மற்றுமொரு இந்திய- பாகிஸ்தானிய போருக்கு வழிவகுத்து விடும் எனவும் தெரிவித்தார்.

...தில் தனிமைப்படுத்தி வைத்திருப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

# கடவுச்சீட்டு முகவர்கள் திருவனந்தபுரத்தில் கைது

(திருவனந்தபுரம்)

போலியான இந்திய கடவுச்சீட்டு மற்றும் பயண ஆவணங்களின் பேரில் இலங்கைத் தமிழர்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவந்த முகவர்களை திருவனந்தபுரம் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இந்த மூவரும் இந்த நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்திருந்தனர் என்றும், ஜீவன்குமார், தண்டபாணி, ஹரிதாஸ் ஆகிய மூவர் கைது செய்யப்பட்டனர் என்றும் திருவனந்தபுரம் காவல்துறையினர் தெரிவித்தனர்.

சென்ற வாரம் திருவனந்தபுரத்தில் மூன்று ஹோட்டல்களில் இருந்து கைதுசெய்யப்பட்ட இரண்டு பெண்கள் உட்பட 22இலங்கைத் தமிழர்களை பொலிசார் புலனாய்வு செய்தபோது போலிக் கடவுச்சீட்டுகளுடன் இவர்கள் வெளிநாடு செல்ல திட்டமிட்டிருந்தது தெரியவந்தது என்றும் திருவனந்தபுரம் காவல்துறையினர் தெரிவித்தனர்.

# நிவாரணப் பணம் வழங்க செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த ஒரு வருடமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுய தொழில் உதவிக் கடன், மீளக் குடியமர்தல் நிவாரணப்பணம் ஆகியன விரைவில் வழங்கப் படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டு வருகிறது. கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்படைந்த, இடம் பெயர்ந்த மக்களுக்காக வழங்கப்பட்டுவந்த மேற்படி பணம் யு. எஸ். எயிட் நிறுவனத்தால் வழங்கப்பட்டு வந்தது. பின் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமானதைத் தொடர்ந்து இது நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

இதனைத் தற்போது மீண்டும் பெற்று மக்களுக்கு வழங்கும் நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டு வருகிறது. இந் நிதியில் யாழ். மாவட்டத்தில் 45,000 குடும்பங்கள் நாலாயிரம் ரூபாவும் 32,000 குடும்பங்கள் இரண்டாயிரம் ரூபாவையும் பெறவுள்ளன. (ச)

## போர்க்கால கருத்தரங்கு

(ஈச்சமோட்டை)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் போர்க்கால கருத்தரங்கு எதிர்வரும் (22-08-91) வியாழக்கிழமை பி. பகல் 4 மணிக்கு கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையஅரங்கில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் ஆஞ்சநேயர், அரியாலை பிரதேச பொறுப்பாளர் பாண்டியன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். (49)

அமைச்சர் சிதம்பரம்

# தாக்கப்பட்டதற்கு எதிராக லோக்சபாவில் ஆர்ப்பாட்டம்

(டில்லி)

மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் அ. தி. மு. க. கட்சியினால் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழக இந்திரா காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று லோக்சபாவில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நேற்றுக்காலை லோக்சபா கூடியபோது இந்த உறுப்பினர்கள் சபையின் மத்தியில் நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர் என்றும் இதனால் கால் மணிநேரம் சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது

மத்திய அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும்கூட பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது என்றும்,

பிரதம மந்திரி பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கு உறுதி அளிக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதேநேரம் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும், அ தி மு. க. உறுப்பினர்களும் சபையின் நடுவில் நின்று காரசாரமாக பேசிக்கொண்டனர்.

குறுக்கிட்டுப் பேசிய சபை முதல்வர் அர்ஜுன்சிங் இது குறித்து பிரதம மந்திரியிடம் தெரிவித்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதோடு, ப. சிதம்பரம் தாக்கப்பட்டதை எதிர்த்து கண்டனமும் தெரிவித்தார்.

## இளைப்பாறும் வயதை அடைந்தும்

# சுயவிபரக் கோவைகள் பூர்த்திசெய்யப்படவில்லை

(நல்லூர்)

அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வு பெறும் வயதை அடைந்தோருக்கும் கூட பல கல்வித் திணைக்களங்களினால் இவர்களது சுயவிபரக் கோவைகள், வரலாற்றுத் தாள்கள் பூர்த்தி செய்யப்படவில்லை.

ஒரு கல்வி மாகாணத்திலிருந்து இன்னொரு கல்வி மாகாணத்திற்கு இடம் மாறி ஆசிரியர் செல்லும்போது இச் சுயவிபரக் கோவைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் முன்னர் ஆசிரியர் கடமையாற்றிய பணிமனைக்கு மீளவும் சுயவிபரக் கோவையைப் பூர்த்தி செய்து அனுப்பும்படி கோரியதைத் தான் அவதானித்ததாக வட-கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் சகல மாகாண, கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் சுயவிபரக் கோவைகளை பூரணப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சகல மாகாண, கோட்டக் கல்லூரி அதிகாரிகளையும் மாகாண கல்விச் செயலாளர் பணித்துள்ளார்.

ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகள் மாதாந்தம் எவ்வளவு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதையும், பூர்த்தி செய்ய முடியாதுள்ள சுய விபரக் கோவைகள் எவ்வளவு என்பது பற்றிய பட்டியல்களையும் ஒவ்வொரு மாதமும் 5 - ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்குப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களை அவர் பணித்துள்ளார்.

## தற்கொலை

பொருளாதார நெருக்கடி காரணமாக வயோதிபர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். கொழும்புத்துறையைச் சேர்ந்த வே. செல்வரத்தினம் (வயது 52) என்பவரே கடந்த செவ்வாய்க்கிழமையன்று தற்கொலை செய்தார். (43)

## மாநாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நிறுத்தப்பட்ட உணவு முத்திரைகள் மீள வழங்குவது தொடர்பான ஆலோசனைகளை மேற்கொள்ளும் பொருட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது

யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி மாநாட்டில் சகல உதவி அரசாங்க அதிபர்களும் செயலக அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த பல மாதங்களாக நிவாரணம் பெறுபவர்களுக்கு உணவு முத்திரை வழங்குவது அரசினால் நிறுத்தப்பட்டது தெரிந்ததே. தற்போது நிவாரணம் வழங்குவது நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்தே உணவு முத்திரையை மீள வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படவுள்ளது. (ச)

## புளொட்டால் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புளொட் குழுவினரால் தமிழ்ப் பொது மகனொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த புதன் கிழமை காலை ஆறுமணியளவில் பதின்மூன்றாம் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது. மேற்படி சம்பவத்தில் பதினாறாம் கிராமத்தைச் சேர்ந்த அழகன் அற்புதம் என்ற பொதுமகனே கொல்லப்பட்டவராவர்.

இதே வேளை இதே தினமிரவு 8 - 30 மணியளவில் செட்டிபாளையம் இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து தேத்தாத்தீவில் உள்ள ஒரு வீட்டைச் சுற்றி வளைத்து பாடசாலை மாணவனான வினாசித்தம்பி தீபன் (வயது 16 என்பவரைக்கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

## அவசரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் உடனடித் தேவைகள் பற்றியும் அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்காக மருதனாமடம், தென்மராட்சி வடமராட்சி ஆகிய கல்விக்கோட்டங்களின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், பொருளாளர்களுக்கான அவசரக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2,00 மணியளவில் மருதனாமடம் கோட்ட அலுவலகத்திலும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 00 மணியளவில்

# கொர்பியின் பதவி நீக்கம்; மேற்குலகம் அதிர்ச்சி

கொர்ப்பசேவ் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை பெரும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் காவியர் பெரஸ் டி கொயிலர் கூறியுள்ளார். மேலும் எம்மைப் பொறுத்தவரை இது ஒரு முக்கியமான நிகழ்வு என்றும், ஏனெனில் சமாதான சக்திகளுக்கும், ஐக்கிய நாடுகள் சபைக்கும் சோவியத் யூனியனின் ஆதரவு இன்றியமையாததாகும். இந்த அரசியல் மாற்றம் உலகச் சூழ்நிலையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாது எனத் தாம் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகள் சோவியத் யூனியனில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராய வெளியுறவு அமைச்சர்களின் அவசர மாநாடொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

நேட்டோ நாடுகளின் வெளியுறவு அதிகாரிகள் அவசர சந்திப்பு ஒன்றை நேற்று பிரேசிலில் நடாத்தவிருந்தனர்,

சோவியத் அதிபர் பதவி நீக்கப்பட்டதையடுத்துகருத்து வெளியிட்ட பிரிட்டன் பிரதமர் ஜோன்மேயர் சோவியத்தில் நடந்த நிகழ்ச்சி அரசியல் சட்டத்திற்கு புறம்பானது எனக் கடுமையான கண்டனம் தெரித்துள்ளார். அத்துடன் கிழக்கு மேற்கு உறவுகள் மற்றும் உலக சமாதானம் என்பவற்றில் இது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடுமெனவும் குறிப்பிட்டுள்ளார். ஜேர்மனி, ஜப்பான் நாடுகள் சோவியத் நிலைமை பற்றி விவாதிக்க அவசர கூட்டங்களைக் கூட்டியுள்ளன.

ஜேர்மனியின் தலைவர் ஹெல்மட் ஹோல் தமது ஆஸ்திரிய விஜயத்தை இடைநிறுத்திவிட்டு ஜேர்மன் தலைநகர் பொன்னுக்கு விரைந்துள்ளார். கிறிஸ்தவ தலைமைப்பீடம் வத்திக்கானும் சோவியத் நிலைமை குறித்து கவலை வெளியிட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொரி அக்கியூனோவ் சோவியத் நிலைமை குறித்து மிகவும் கவலையடைவதாகக் குறிப்பிட்டார். சோவியத்தின் உள்நாட்டில் ஏற்படும் மாற்றங்களால் இந்திய சோவியத் உறவுகள் பாதிப்படைய மாட்டாது என இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

சோவியத்தின் புதிய ஆட்சியாளர்கள் தமது உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றி அறிவிக்கும் வரை கொர்ப்பசேவ் பதவி நீக்கம் செய்யப்பட்டதன் அரசியல் முக்கியத்துவம் உணரப்படமாட்டாது என பிரான்சு அரசு கருத்து வெளியிட்டுள்ளது.

சோவியத்தில் ஏற்பட்ட மாற்றங்களையடுத்து பெருமளவு யூதர்கள் வெளியேறுவர் என எதிர்பார்க்கும் இஸ்ரேல் அதற்கான ஆயத்த வேலைகளில் அவசரமாக ஈடுபட்டிருப்பதாக டெல் அவிவ் செய்திகள் கூறுகின்றன.

சோவியத்

கே. ஜி. பி அமைப்பின் தலைவர் குருஷோவ், இராணுவத் தலைமைத் தளபதி யசோவ், சோவியத் பிரதமர் பவுலோவ் ஆகியோர் சோவியத் அரசைக் கைப்பற்றியுள்ள ஆட்சிக் குழுவில் முக்கிய உறுப்பினர்கள் என்று மாஸ்கோவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொர்பச்சேவுக்கு உடல் நலக் குறைவாக இருப்பதால் தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளதாகத் தற்போதைய ஜனாதிபதி ஜெனகே கூறியுள்ளார்.

சோவியத் ரஷ்யாவை அழிவில் இருந்து காக்கவும், கண்மூடித்தனமான கொள்கையிலிருந்து நாட்டை மீட்கவும் தாம் சோவியத் அரசைக் கைப்பற்றியுள்ளதாக சோவியத்தின் புதிய அரசு அறிவித்திருக்கிறது

மாஸ்கோவில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் சோவியத் இராணுவமும் கவச வாகனங்களும் குவிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சோவியத்தின் இராணுவம் ஆட்சியைக் கவிழ்ப்பதில் பெரும்பங்கு ஆற்றியிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

மற்றும் புதிய அரசுக்குப் பணிய மறுக்கும் சோவியத் குடியரசுகள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், நாடாளுமன்ற உட்பட யாராலும் பதவி

# துணுக்காய் உ. அ. அ பிரிவில் இரு அலுவலர் மட்டும் பணி

(மாங்குளம்)

துணுக்காய் உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் இரண்டு உத்தியோகத்தர்கள் மட்டும் பணி புரிந்து வருகின்றனர்.

## ஆர்ப்பாட்டம்

மாறான இராணுவ நடவடிக்கைகள் எதுவும் மாஸ்கோவில் காணப்படவில்லை என்று ராய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

மாஸ்கோவின் இரண்டு பிரதான உள்ளூர் விமான நிலையங்களும் சர்வதேச விமான நிலையமும் சீராக இயங்குவதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

டாஸ் செய்தி ஸ்தாபனமும், இஸ்வெஸ்தியா, மற்றும் 'மொஸ்கோ நியூஸ்' என்னும் சுதந்திரப் பத்திரிகை நிறுவனங்களும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந் நிறுவனங்களுக்கு முன் எட்டு கவச வாகனங்கள் காணப்பட்டதாக தெரியவருகிறது

அரசியல் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் தடை. செய்யப்படும் பத்திரிகைகள் கட்டுப்படுத்தப்படும் என்று புதிய

இவ் அலுவலகத்தில் உதவி அரசாங்க அதிபரும் ஒரு லிகிதரும் மட்டுமே பணியாற்றி வருவதாக செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தை மாதம் சுய விருப்பத்தில் ஓய்வு பெற்றுச் சென்ற பல நூற்றுக்கணக்கான உத்தியோகத்தர்களது இடங்களுக்கு பதிலீடு செய்யப்படாமலிருந்து வருவதால் இம்மாவட்டத்தில் வேலைப் பளுக்கள் அதிகரித்து வருகின்றன. (82)

வலதுசாரி

ளார்.

மேலும் மிகெயில் கொர்ப்பசேவை மீண்டும் பதவியில் அமர்த்தக் கோரும் வகையில் பொது வேலை நிறுத்தம் ஒன்றில் மக்கள் ஈடுபட வேண்டும் என்றும், ஆயுதப் படையினர் புரட்சியாளருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

ரஷ்ய நாடாளுமன்றக் கட்டடத்தைச் சுற்றிவளைத்துக் கொண்டு நின்ற இராணுவக் கவச வண்டி ஒன்றின்மீது ஏறி நின்று பொரிஸ் யெல்சின் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உரை

சமுதாய

உறுப்பினர் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்ட மேற்படி திறப்பு விழாவில் தொடர்ந்து அவர் உரையாற்றினார் ஆனையிறவுச் சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது களத்திற்கு வெளியில் நின்ற மக்கள் ஏதோ வகையில் தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருந்தனர். என்பது ஓர் பெருங்குறையாகவுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் யதார்த்த பூர்வமான சிந்தனையை ஏற்படுத்துவதில் எமது கல்வி அமைப்பு உதவ வேண்டும். நெருக்கடியான நிலையில் இருந்து விடுபடக்கூடியவழியைச் சிந்திக்கத் தூண்டும் உணர்வை எமது கல்வி அமைப்பு உருவாக்கிக் கொடுக்கவேண்டும்

ருந்து இன்னொரு கல்வி மாகாணத்திற்கு இடம் மாறி ஆசிரியர் செல்லும்போது இச் சுயவிபரக் கோவைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் முன்னர் ஆசிரியர் கடமையாற்றிய பணிமனைக்கு மீளவும் சுயவிபரக் கோவையைப் பூர்த்தி செய்து அனுப்பும்படி கேரியதைத் தான் அவதானித்ததாக வட-கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் சகல மாகாண, கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் சுயவிபரக் கோவைகளை பூரணப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சகல மாகாண, கோட்டக் கல்லூரி அதிகாரிகளையும் மாகாண களையும் ஒவ்வொரு மாதமும் 5 - ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்குப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களை அவர் பணித்துள்ளார்.

## தற்கொலை

பொருளாதார நெருக்கடி காரணமாக வயோதிபர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். கொழும்புத்துறையைச் சேர்ந்த வே செல்வரத்தினம் (வயது 52) என்பவரே கடந்த செவ்வாய்க்கிழமையன்று தற்கொலை செய்தார். (43)

---

சமுதாய

உறுப்பினர் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்ட மேற்படி திறப்பு விழாவில் தொடர்ந்து அவர் உரையாற்றினார் ஆனையிறவுச் சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது களத்திற்கு வெளியில் நின்ற மக்கள் ஏதோ வகையில் தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருந்தனர். ஆனையிறவில் புலிக்கொடி ஏற்றப்படும் என்ற உற்சாகத்தில் தொழிற்பட்டனர். இது என்றுமில்லாத வகையில் மக்களின் எழுச்சியை ஏற்படுத்தியது ஆனால் ஆனையிறவு முகாமிற்குள் இராணுவம் புகுந்துவிட்டது என்றவுடன் அவர்களது உற்சாகம் குன்றிவிட்டது இது எமது மக்களின் பலவீனத்தையே காட்டுகிறது. எந்த நிலையிலும் உறுதி குன்றாத மனோ நிலையில் நாம் போராட்டத்தைச் சந்திக்க வேண்டும். இப்போரில் 500 பேர் இறந்ததை எண்ணித் துன்பப்படாது அவர்கள் வீணாக இறந்துவிட்டார்கள் என அங்கலாய்த்தார்கள். இந்நிலை தமிழர் மத்தியில் எற்படக்கூடாது. எதிலும் மன உறுதி வேண்டும் என்றார்.

பல நூறு வருடங்களாக தமிழ்சமுதாயம் யுத்தம் பற்றி அறிந்திருக்கவில்லை ஏனைய நாடுகளில் யுத்தக் கதை பற்றிப் போதிப்பதற்கு பல நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன ஆனால் அப்படியான ஒன்று எம்மிடையே இல்லை என்பது ஓர் பெருங்குறையாகவுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் யதார்த்த பூர்வமான சிந்தனையை ஏற்படுத்துவதில் எமது கல்வி அமைப்பு உதவ வேண்டும். நெருக்கடியான நிலையில் இருந்து விடுபடக்கூடியவழியைச் சிந்திக்கத் தூண்டும் உணர்வை எமது கல்வி அமைப்பு உருவாக்கிக் கொடுக்கவேண்டும்

இத்தகைய பணியைத் தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் ஆக்கிக் கொடுக்க வேண்டும் 5 வருடங்களிலாவது எமது சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த ஆசிரியர்கள் முன்வர வேண்டும். இந்த ஒன்றியமானது தனது முழுமையான செயல்பாடுகளை நிறைவேற்றிக் கொண்டு போகும் பொழுது அதன் முக்கியத்துவம் புலப்படும்

எதிர்காலத்தில் வீரமுள்ள சமுதாயத்தை உருவாக்க ஆசிரியர்கள் பெரும்பங்காற்ற வேண்டியுள்ளது. இவ்வாறான சமுதாயப் புரட்சியின் மூலம் வீரமுள்ளவர்களை உருவாக்க முனைய வேண்டும்.

மாணவர்களை சாரணீயம் போன்றவற்றில் ஈடுபடச் செய்வதன் மூலம் அவர்களை ஓர் உணர்ச்சியுள்ள விடுதலையை வேண்டி நிற்கக்கூடிய மனோநிலை உளவர்களாக ஆக்கலாம், சோர்வு என்பது எம்மத்தியில்ஏற்படக்கூடாது இதனால்தான் நாம் பின்னடைந்துள்ளோம் என்றார். (ச)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

இதே வேளை இதே தினமிரவு 8 - 30 மணியளவில் செட்டிபாளையம் இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து தேத்தாத்தீவிலுள்ள ஒரு வீட்டைச் சுற்றி வளைத்து பாடசாலை மாணவனான வினாசித்தம்பி தீபன் (வயது 16 என்பவரைக்கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

## அவசரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் உடனடித் தேவைகள் பற்றியும் அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் கலந்து உரையாடுவதற்காக மருதனாமடம், தென்மராட்சி வடமராட்சி ஆகிய கல்விக்கோட்டங்களின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், பொருளாளர்களுக்கான அவசரக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2,00 மணியளவில் மருதனாமடம் கோட்ட அலுவலகத்திலும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 00 மணியளவில் சாவகச்சேரி றிபேக்கல்லூரியிலும், சனிக்கிழமை காலை 10 00 மணியளவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் இக் கலந்துரையாடல்கள் இடம் பெறும்.

சகலரையும் தவறாது சமுகம் தரும்படி பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

## மீண்டும் 26 ஆம் திகதி விசாரணை

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச் சோலை படுகொலைகள் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் மீண்டும் நடைபெறும்.

மட்டக்களப்பு விமானப் படை முகாமில் 27, 28, 29 ஆம் திகதி வரை விசாரணைகள் இடம் பெறவுள்ளன.

---

பெங்களூரில்

சார் சுற்றிவளைத்திருக்கும் வீடொன்றின் உட்புறத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு வருவதாக இந்தியத் தொலைக்காட்சி நேற்றிரவு அறிவித்தது.

---

உறுப்பினர்கள் என்று மாஸ்கோவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொர்பச்சேவுக்கு உடல் நலக் குறைவாக இருப்பதால் தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளதாகத் தற்போதைய ஜனாதிபதி ஜெனகே கூறியுள்ளார்.

சோவியத் ரஷ்யாவை அழிவில் இருந்து காக்கவும், கண்மூடித்தனமான கொள்கையிலிருந்து நாட்டை மீட்கவும் தாம் சோவியத் அரசைக் கைப்பற்றியுள்ளதாக சோவியத்தின் புதிய அரசு அறிவித்திருக்கிறது

மாஸ்கோவில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் சோவியத் இராணுவமும் கவச வாகனங்களும் குவிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சோவியத்தின் இராணுவம் ஆட்சியைக் கவிழ்ப்பதில் பெரும்பங்கு ஆற்றியிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

மற்றும் புதிய அரசுக்குப் பணிய மறுக்கும் சோவியத் குடியரசுகள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், நாடாளுமன்றம் உட்பட யாராலும் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள் என்று சோவியத்தின் புதிய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சோவியத்தில் சில பகுதிகளில் ஆறு மாதகால அவசரகாலச் சட்டத்தையும் புதிய அரசு பிரகடனப் படுத்தியுள்ளது.

கொர்ப்பசேவினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சீர்திருத்தங்கள் அனைத்தும் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் புதிய அரசு அறிவித்துள்ளது.

---

மாணவர்

திறந்து வைக்கப்படவுள்ளதுடன் பாதுகாப்பான முறையில் புனிதத்தன்மையுடன் பேணப்படுவதோடு சகல மாணவர்களும் பார்க்கக்கூடிய வகையில் வைக்கப்படும்.

இது தமிழீழதேசிய ஆசிரியர் ஒன்றியத்தின் முதலாவது வேலைத்திட்டம் என இதன் அமைப்பாளர் அருணாசலம் தெரிவித்தார் (ச)

---

வவுனியா

மர்மமானபல முறையில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போகின்றனர் என்று தெரியவருகிறது. (தி)

---

அதிபர் பிரிவில் இரண்டு உத்தியோகத்தர்கள் மட்டும் பணி புரிந்து வருகின்றனர்.

ஆர்ப்பாட்டம்

மாறான இராணுவ நடவடிக்கைகள் எதுவும் மாஸ்கோவில் காணப்படவில்லை என்று ராய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

மாஸ்கோவின் இரண்டு பிரதான உள்ளூர் விமான நிலையங்களும் சர்வதேச விமான நிலையமும் சீராக இயங்குவதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

டாஸ் செய்தி ஸ்தாபனமும், இஸ்வெஸ்தியா, மற்றும் 'மொஸ்கோ நியூஸ்' என்னும் சுதந்திரப் பத்திரிகை நிறுவனங்களும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந் நிறுவனங்களுக்கு முன் எட்டு கவச வாகனங்கள் காணப்பட்டதாக தெரியவருகிறது

அரசியல் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் தடை. செய்யப்படும் பத்திரிகைகள் கட்டுப் படுத்தப்படும் என்று புதிய ஆட்சிக் குழுவின் முதல் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

---

கொர்ப்பசேவ்

னொரு ஆய்வு நிறுவனமான ஏ பி. ஏஜென்சியோ கருங்கடலுக்கு அருகே கிறிமியாவில் அமைந்த அவருடைய விடுமுறைக் கால வாஸஸ்தலத்தில் கொர்பசேவ் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

கொர்ப்பசேவுடன் தொடர்பு கொள்வதற்காகத் தான் முயற்சித்ததாகவும் ஆனால் தம்மால் இது முடியவில்லை என்றும் பொறிஸ் யெல்ஸ்ரின் நேற்று மாஸ்கோவில் செய்தியாளர் கூட்டமொன்றில் தெரிவித்ததாகவும் அஸோசியேற்றெட் பிறஸ் ஏஜென்சிச் செய்தி மேலும் தெரிவிக்கிறது

---

மொஸ்கோவில்

பதவி ஏற்றிருக்கும் ஜெனகே 54 வயதுடையவர். கடந்த டிசம்பர் மாதம் கொர்பச்சேவின் உதவியுடன் உதவி ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றவர். இவர் பழைமைவாதிகளுடன்சேர்ந்து இராணுவச் சதிப்புரட்சி ஒன்றைச் செய்யக் கூடும் என்று முன்னரே எச்சரிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது

---

ஒருவிகிதமும் மட்டுமே பணியாற்றி வருவதாக செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தை மாதம் சுய விருப்பத்தில் ஓய்வு பெற்றுச் சென்ற பல நூற்றுக்கணக்கான உத்தியோகத்தர்களது இடங்களுக்கு பதிலீடு,செய்யப்படாமலிருந்து வருவதால் இம்மாவட்டத்தின் வேலைப் பளுக்கள் அதிகரித்து வருகின்றன. (82)

---

வலதுசாரி

ளார்.

மேலும் மிகெயில் கொர்ப்பசேவை மீண்டும் பதவியில் அமர்த்தக் கோரும் வகையில் பொது வேலை நிறுத்தம் ஒன்றில் மக்கள் ஈடுபட வேண்டும் என்றும், ஆயுதப் படையினர் புரட்சியாளருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

ரஷ்ய நாடாளுமன்றக் கட்டடத்தைச் சுற்றிவளைத்துக் கொண்டு நின்ற இராணுவக் கவச வண்டி ஒன்றின்மீது ஏறி நின்று பொரிஸ் யெல்சின் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உரை நிகழ்த்தினார்.

அவ்வுரையில் புதிய ஆட்சிக் குழுவின் ஆணைகள் ரஷ்யக் குடியரசினுள் செல்லுபடியற்றவை எனக் கூறியபோது ஆர்ப்பாட்டக்காரர்கள் கரகோஷம் செய்தனர். பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதுடன் நாடாளுமன்றக் கட்டடத்தைப் பாதுகாக்க மக்களுக்கு அழைப்பு விடுத்தார். புதிய ஆட்சியாளர்கள் தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிகைகள் என்பனவற்றை தம்வசம் எடுத்துக் கொண்டிருப்பதால் உண்மையான நிலைவரத்தை வெளிநாடுகளுக்கும், சோவியத் மக்களுக்கும் எடுத்துச் சொல்லும்படி வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை பொரிஸ் யெல்சின் கேட்டுக்கொண்டார்.

ஒரு நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மனிதச் சங்கிலி அமைத்து இராணுவ வாகனங்களை முன்னேற விடாது தடுத்தனர்.

இதே நேரம் லித்வேனியா, லட்வியா, எஸ்தோனியா போன்ற சோவியத்திலிருந்து பிரிந்து சென்றதாக அறிவித்த குடியரசுகள் இப்போதுள்ள நிலை குறித்து ஆராய்ந்து வருகின்றன.